**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**E.P.No.94/2024**

மனுதாரர் தரப்பு 1 வது சாட்சி ஆனந்தகுமார் என்பவரின் வாக்குமூலம் ( 1869 ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது பிரிவு 6 வது விதியின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆனந்தகுமார் | சாதி | : | |
| தகப்பனார் பெயர் | : | ரகுபதி | சமயம் | : | |
| ஊர் | : | அருப்புக்கோட்டை | தொழில் | : | கிளை மேலாளர் |
| தாலுகா | : | அருப்புக்கோட்டை | வயது | : | 38 |

நாள் : 15.10.2025

ம.சா. 1 – ஆனந்தகுமார்

**முதல் விசாரணை :–**

நான் இந்த வழக்கின் மனுதாரரான Sriram Transport Finance Company Limited அருப்புக்கோட்டை கிளையில் கிளைமேலாளராக பணிபுரிந்து வருகிறேன். மேற்சொன்ன பைனான்ஸ் நிறுவனத்திற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது நிரூபண வாக்குமூலத்தை என்னுடைய தரப்பு சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1) ம.சா.ஆ. 1 – என்னுடைய பணி அடையாள அட்டையின் நகல். (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது)

2) ம.சா.ஆ.2 – இவ்வழக்கை நடத்த மனுதாரர் நிறுவனம் சார்பாக எனக்கு வழங்கப்பட்டுள்ள 26.10.2006 தேதியிட்ட பொது அதிகார பத்திரம் நகல். (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது)

எதிர்மனுதாரர்கள் இருவரும் போதிய பண வசதி இருந்தும் வேண்டுமென்றே தீர்ப்பை நிறைவேற்றாமல் கால தாமதம் செய்து வருகிறார்கள். ஆகவே அவர்களை கைது செய்து தீர்ப்பாணையை நிறைவேற்ற வேண்டுகிறேன். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.